**படல்கும்புற பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 24 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 28 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து படல்கும்புற பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 364,000 தொகை கணக்கீடு செய்யப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது கணக்குகளில் சீராக்கப்படும். |
| (ii) | மீளாய்வாண்டிற்காக பதுளை நீதவான் நீதமன்றத்திலிருந்து கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது கணக்குகளில் சீராக்கப்படும். |
| (iii) | ஆண்டிற்குரிய செலுத்த வேண்டிய ரூபா 76,975 தொகையான மீண்டெழும் செலவினங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது கணக்குகளில் சீராக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 39,550 தொகையான பெறவேண்டிய விளம்பர அறிவித்தல் பதாதைக் கட்டண வருமானம் மற்றும் மீளாய்வண்டிற்குரிய விளம்பர அறிவித்தல் பதாதைக் கட்டண வருமானம் என்பன இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது கணக்குகளில் சீராக்கப்படும். |
| (v) | 2012 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 20,647 தொகையான நிலுவை சம்பளம் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும், அப்பெறுமதி ஆண்டின் ஆரம்பத்தின் போது பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டியதாக இனங்கண்டு கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது கணக்குகளில் சீராக்கப்படும். |
| (vi) | உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைகளுக்காக எதிர்வரும் வருடத்திற்காக செலுத்தப்பட்ட ரூபா 16,771 தொகை முற்கொடுப்பனவாகக் காண்பிக்கப்படாமல் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது கணக்குகளில் சீராக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| (i) | 19(xii) ஆம் பிரிவு | பிரதேச சபைக்குரிய 13 கடைகள் 30 வருட காலத்திற்காக குத்தகை | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் | உள்ளூராட்சி ஆணையாளரினால் அங்கீகரித்த கடிதத்தின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக விடயப் பொறுப்பு அமைச்சரின் முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. |
| (ii) | 140 ஆம் பிரிவு | ஆதனவரி அறவிடுவதற்கான ஆதனங்களை நாளதுவரையாக மதிப்பீடு செய்யாது 2006 ஆம் ஆண்டில் மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2015 ஆம் ஆண்டின் போது மதிப்பீடொன்று செய்யப்பட்டிருந்த போதிலும் இறுதி அறிக்கை கிடைக்காமையால் இந்த நாட்களில் மீண்டும் இறுதி மதிப்பீடொன்று மேற்கொள்ளப் படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,741,559 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 381,662 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 790,000 | 948,957 | 846,484 | 102,473 | 785,000 | 912,508 | 870,963 | 41,545 |
| (ii) | வாடகை | 13,099,200 | 3,690,051 | 2,899,037 | 791,014 | 2,907,000 | 4,125,784 | 3,540,030 | 585,754 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 666,200 | 621,280 | 621,280 | - | 648,700 | 660,070 | 660,070 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 2,784,000 | 4,446,579 | 3,279,446 | 1,167,133 | 3,504,000 | 3,234,886 | 1,952,187 | 1,282,699 |
| | மொத்தம் | 17,339,400 | 9,706,867 | 7,646,247 | 2,060,620 | 7,844,700 | 8,933,248 | 7,023,250 | 1,909,998 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ரூபா 9,706,867 தொகையான மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா 2,060,620 தொகை அதாவது 21 சதவீதம் அறவிடப்படவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | இதுவரையிலும் நிலுவை வருமானங்களில் ஒரு பகுதி அறவிடப்பட்டிருந்ததுடன் ஏனைய வருமானங்களில் உள்ள நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பவற்றை அறவிடுவதற்கு பட்டோலை தயாரித்து மாகாண இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ஆதனவரி அறவிடுவதற்கு பொருத்தமான பிரதேசங்கள் பிரதேச சபையினால் இறுதித் தடவையாக இனங்காணப்பட்ட வருடம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் முன்னர் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தியடைந்த பிரதேசங்களை இனங்கண்டு ஆதனவரி அறவிடுவதற்கு சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | அபிவிருத்தி அடைந்த பிரதேசம் முன்னரே இனங்காணப்பட்டு உரிய வழி முறைமுறைகளைப் பின்பற்றி ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ii) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 221,630 தொகையான நிலுவை ஆதனவரி வருமானத்தில் ஆண்டின் போது ரூபா 181,592 தொகை அதாவது 82 சதவீதம் அறவிடப்படவில்லை. | நிலுவை ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | விசேட நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டு நிலுவை ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | அரசாங்கத்தின் 05 நிறுவனங்களில் இருந்து | நிலுவை ஆதனவரி அறவிடப்பட | நிலுவை ஆதனவரி செலுத்துமாறு |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 102,628 தொகையான ஆதனவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | அறிவித்த போதிலும், கொடுப்பனவு செய்யப் படாதிருந்ததுடன் எதிர்காலத்தில் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

**2.2.4 வாடகை**

--------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய சபைக்குச் சொந்தமான 14 ஆதனங்கள் வாடகைக்கு வழங்கியதற்காக அறவிட வேண்டிய ரூபா 383,155 தொகை மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்படவில்லை. | நிலுவை வாடகைப் பணம் அறவிடப்பட வேண்டும். | பதிவேடுகளைப் பேணும் போது பிழையான நிலுவை மீதி முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் தீர்த்து வைக்கப்பட்டு நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | சபைக்குரிய படல்கும்புற வாராந்த சந்தை 2018 ஆம் ஆண்டிற்காக வாடகைக்கு வழங்கியதால் அறவிட வேண்டிய வாடகை மற்றும் தாமதக் கட்டணம் ரூபா 284,543 தொகை அறவிடப்படவில்லை. | நிலுவை வாடகைப் பணம் அறவிடப்பட வேண்டும். | இதுவரையிலும் ரூபா 172,835 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் மிகுதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | கடைகளை வாடகைக்கு வழங்குதல் தொடர்பான உடன்படிக்கையின் 08 ஆவது பிரிவின் படி கடைகளை உப வாடகைக்கு வழங்க முடியாதிருந்த போதிலும், படல் கும்புற பேருந்து நிலைய கடைகளைப் பெற்ற 05 வாடகையாளர்களினால் 05 கடைகள் உப வாடகைக்கு வழங்கப்பட்டு மாதமொன்றுக்கு ரூபா 7,500 முதல் ரூபா 27,500 வரை வருமானம் பெறப்பட்டிருந்தது. | வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடை உரிமையாளர்களுக்கு அறிவித்து எதிர்காலத்தில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | பேருந்து நிலைய இரண்டு மாடி சந்தைக் கட்டிடத் தொகுதியில் 13 கடைகளின் மாதாந்த வாடகை 2016 ஏப்ரல் 20 ஆந் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின் மூலம் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2016 மே முதல் 2018 திசெம்பர் வரை அதில் 10 கடைகள் புதிய மதிப்பீட்டு வாடகை அறவிடப்படாமையினால் ரூபா 348,800 தொகை இழக்கப்பட்டிருந்தது. | புதிய மதிப்பீட்டின் படி வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த மதிப்பீடு 05 வருடங்களுக்காக மாத்திரம் இருந்ததுடன் அடுத்து வரும் மதிப்பீட்டின் போது நட்டம் ஏற்படாத வகையில் வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கேள்வி கோரும் போது மேலதிக கேள்வித் தொகையொன்று அறவிடப் படுகின்றமையால் நட்டத்தை விஞ்சி வருமானம் கிடைத்திருந்தது. |

**2.2.5 ஏனைய வருமானம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான வீதிச் செப்பனிடுகை இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியதற்காக முன்னைய ஆண்டிற்காக ரூபா 173,120 தொகையும், மீளாய்வாண்டிற்காக ரூபா 16,860 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | இதுவரையிலும் ரூபா 30,000 தொகை அறவிடப்பட்டுள்ளது. மிகுதித் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய அறவிட வேண்டிய ரூபா 89,966 தொகையான நீர்க் கட்டண மீதி காணப்பட்டது. | நிலுவைப் பணம் அறவிடப்பட வேண்டும். | ரூபா 67,121 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் மிகுதி நிலுவையை எதிர்காலத்தின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 583,462 தொகை மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 1,077,166 ஆக இருந்தன. அவ்வாறே மீளாய்வாண்டிற்காக பதுளை நீதவான் நீதிமன்றத்திலிருந்து கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் மொனறாகலை காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து 2018 ஒக்தோபர் முதல் திசெம்பர் வரையான காலத்திற்குரியதாக அறவிட வேண்டிய முத்திரைக் கட்டணத்தின் அளவு என்பன இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | பட்டோலைகளைத் தயாரித்து மாகாண இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் நிலுவைப் பணம் எதிர்காலத்தில் அறவிடப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் | உப விதிகள் விதிக்கப்படாத விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்பட | ஏனைய உப விதிகள் 07 தயாரிக்கப்பட்டு அமுல்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| 31 ஆந் திகதி வரையிலும் அதில் 07 விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்படவில்லை. | வேண்டும். | எடுக்கப்படும். |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்காக விரைவாக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படும். |

**(இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபையினால் கழிவுப்பொருட்களை அகற்றும் கட்டணம் பகிரங்கப்படுத்தப்பட்டிருந்த போதிலும், கழிவுப்பொருள் வரி அறவிட்டு உரிய கழிவு முகாமைத்துவ செலவினங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வர்த்தமானியின் பிரகாரம் கழிவுப்பொருள் வரி அறவிடப்பட வேண்டும். | கழிவுப்பொருள் வரி அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயிற்சியளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பயிற்சியளிப்பதற்காக உத்தியோகத்தர்கள் அனுப்பப்படும். |
| (iii) | நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுப்பொருட்களில் உக்கும் மற்றும் உக்காத என வேறுபடுத்தி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் உக்கும் கழிவுகளைப் பயன்படுத்தி சேதனப் | உரிய முறைமையின் பிரகாரம் கழிவுப்பொருட்கள் அகற்றப்பட வேண்டும். | கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தில் ஆரம்ப வேலை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் எதிர்காலத்தில் சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

பசளை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் முறையற்ற வகையில் இரண்டு குழிகளில் போடப்பட்டிருந்தது.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகளின் ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030'' தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு அடைதலின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | குறிகாட்டிகளை இனங்கண்டு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சபைக்குரிய 03 வாகனங்கள் 2013 திசெம்பர் 03 ஆந் திகதி ஏலத்தில் விற்பனை செய்வதற்காக கஹகொல்ல மாகாண இயந்திர அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | சபை அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த நிலையான விளம்பர அறிவித்தல் பதாதை | 2019 ஆம் ஆண்டிற்காக மெய்மையாய்வு செய்யப்பட வேண்டும். | இந்த நாட்களில் மெய்மையாய்வை மேற்கொள்வதற்கும் கட்டணத்தை அறவிடவதற்கும் |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (இ) | சபைக்குச் சொந்தமான கெப் வண்டி 2019 சனவரி முதல் மைலோ மீற்றர் செயலிழந்திருந்த போதிலும், அது செயற்படு நிலைக்குக் கொண்டுவரப்பட்டிருக்க வில்லை. | மைலோ மீற்றர் செயற்படு நிலைக்குக் கொண்டுவரப்பட வேண்டும். | எதிர்காலத்தில் விரைவாக மைலோ மீற்றர் பொருத்தப்படும். |
| (ஈ) | சபை பயன்படுத்துகின்ற 03 வாகனங்களின் சட்டரீதியான உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்க வில்லை. | சட்டரீதியான உரித்தை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | விரைவாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விடயப்பொறுப்பு உத்தியோகத்தருக்கு ஆலாசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (உ) (i) | புறநெகும செயற்திட்டத்தின் கீழ் சபையின் ஹிங்குறுகடுவ உப அலுவலகத்திற்காக ரூபா 29,255,282 தொகை செலவில் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு 2017 யூன் 26 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த உப அலுவலகம் ஆரம்பிக்கப் படாதிருந்ததுடன் செயற்திட்டம் மூலம் வழங்கப்பட்ட ரூபா 1,479,300 பெறுமதியான தளபாடப் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன விளைவற்றுக் காணப்பட்டன. | கட்டிடத்தையும் உரிய பொருட்களையும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அலுவலகத்தின் தேவைக்காக புதிதாக கொள்வனவு செய்யாமல் உப அலுவலகத்தின் தளபாடப் பொருட்களில் ஒரு பகுதியைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | கட்டிடத்தின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக 06 ஊழியர்கள் நியமிக்கப்பட்டு மீளாய்வாண்டின் மார்ச் முதல் திசெம்பர் வரையான காலத்தில் சம்பளம் மற்றும் படியாக ரூபா 859,592 தொகை | ஊழியர்கள் வேறு பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். | உப அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் மிகை ஊழியர்களை வேறு பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கு தேவையான இடங்களில் நியமிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருந்தது. உப அலுவலகத்திற்குரிய பணிகளுக்காக பயன்படுத்தப்படாமையால் இந்த செலவினமும் பயனற்ற செலவினமாகியிருந்தது. | | |
| (iii) | உப அலுவலகத்தை பயன்பாடுடையதாக நடாத்திச் செல்லும் முறை தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரினால் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த ஆலோசனையின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனைப் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது வாராந்த சந்தை மற்றும் செய்திப் பத்திரிகை வாசித்தல் நிலையமொன்று நடாத்திச் செல்லப்படுவதுடன் எதிர்காலத்தில் நூலகம் ஆரம்பிக்கப்படும். |
| (ஊ) | சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரத்தின் பதிவுச் சான்றிதழ் தொலைந்து போயிருந்ததுடன் அது தொடர்பான தேவையான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொலைந்து போனமைக்கு பொறுப்பான உத்தியோகத்தர் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன் விரைவாக பதிவுச் சான்றிதழ் பெறப்பட வேண்டும். | தற்போது இது தொடர்பான எந்தவொரு ஆவணமும் சபையில் காணப்படாதிருந்ததுடன் மிகுதி நடவடிக்கைகள் எடுக்குமாறு விடயப்பொறுப்பு உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (எ) | மீளாய்வாண்டிற்காக வியாபார அனுமதிப்பத்திரம் மற்றும் வியாபார வரி செலுத்த வேண்டிய நிறுவனங்கள் தொடர்பான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2019 ஆம் ஆண்டிற்காக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த தினங்களில் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி சபையில் 03 பதவிகளில் 15 ஊழியர்களின் மிகை மற்றும் 06 பதவிகளில் 06 ஊழியர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன. | மிகை பதவியணியினரின் பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கும் வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 15 பதவிகளில் 08 பதவிகளுக்காக 25/2014 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் ஏனைய 07 பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கு ஆட்சேர்ப்புக்களைச் செய்வதற்குரிய நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என அறியத்தருகின்றேன். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கழிவுப்பொருள் மீள் சுழற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக 15 ஏக்கர் 2010 திசெம்பர் 14 ஆந் திகதி சபைக்கு கையேற்று காணியின் அளவை நடவடிக்கைகளுக்காக 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 120,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், உரிய நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்தக் காணியில் அனுமதியற்ற 26 குடும்பங்கள் குடியிருந்து வருகின்றமையும் வெளிப்படுத்தப்பட்டது. | கழிவுப்பொருள் மீள் சுழற்சி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிப்பதற்கும் காணியை தீர்த்துக் கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அனுமதியற்ற குடியிருப்பாளர்களின் பிரச்சினையான நிலைமையின் காரணமாக செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. செயற்திட்டம் தற்போது கழிவுகள் அகற்றப்படுகின்ற காணியில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 3.4.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 60 ஏக்கர் 01 றூட் 34 பேர்ச் அளவான 98 காணிக் கூறுகளின் சட்டரீதியான உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் 90 காணிக் கூறுகளின் அளத்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. | சபைக்குரிய காணிகளை அளவீடு செய்து சட்டரீதியான உரித்து கையேற்கப்பட வேண்டும். | கையேற்பதற்குத் தேவையான ஆவணங்கள் பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அளவீடுகளை மேற்கொண்டு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | ரூபா 1,617,483 தொகையான செலவினத்தில் நிர்மாணிக்கப்பட்ட போகஹபெலஸ்ஸ பிரசேதத்தின் 02 கடைகள் வீதி ஒதுக்கப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டமையால் அந்தக் காணியை கையேற்பதற்கு முடியாதிருந்தது. | உரிய நிறுவனத்துடன் கலந்துரையாடி கையேற்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் கலந்துரையாடி மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

### 3.4.3 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 02 வாகனங்களுக்கு எரிபொருள் எரிவு பரிசோதனை செய்யப்படவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுரையின் பிரகாரம் எரிபொருள் எரிவு பரிசோதனை செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படும். |

### 3.5 பெறுகைகள்

#### 3.5.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது. |

#### 3.5.2 ஒப்பந்த நிர்வாகம்

**நிறைவேற்றப்படாத இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் பாதீட்டின் பிரகாரம் 13 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ரூபா 11,000,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், எந்தவொரு செயற்திட்டமும் மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | குறித்த பணிகளை இனங்கண்டு பாதீட்டின் மூலம் மூலதன செலவினங்களுக்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட வேண்டும். | படல்கும்புற நகரத்தில் நிர்மாணிக்கப்பட்ட 10 புதிய கடைகளுக்கு கேள்வி கோரி பெறப்படுகின்ற வருமானத்தில் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அதனை கேள்வி கோருவதற்கு முடியாதிருந்தமையால் அந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் பாதீட்டின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்துடனும் செலவினத்துடனும் ஆண்டின் உள்ளபடியான | சாத்தியமான பாதீடொன்றைத் தயாரித்து அதில் காண்பிக்கப்பட்டுள்ள இலக்குகளை அடைய வேண்டும். | பல்வேறு காரணங்களினால் முரண்கள் ஏற்பட்டிருந்ததுடன் மேலதிகமாகச் செல்லும் செலவினத்திற்குரிய செலவினத் தலைப்புக்களுக்காக நிதிஏற்பாடு மாற்றப்பட்டிருந்தது. மிகை |

| | | |
|---|---|---|
| வருமானத்தையும் செலவினத்தையும் ஒப்பீடு செய்த போது 05 வருமான விடயங்களில் 20 சதவீதம் முதல் 71 சதவீதம் வரையும், 07 செலவின விடயங்களில் 12 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையும் முரண்கள் காணப்பட்டன. | | மதிப்பீடுகளின் காரணமாக நகரத்தில் 10 கடைகளை கேள்வி கோருவதற்கும் அந்த கேள்வி வருமானம் மூலம் செய்வதற்கு எதிர்பார்த்த செலவினங்களும் சேமிக்கப்பட்டிருந்தன. |

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பிரதேச சபையில் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ளப்படாதிருந்த போதிலும், எதிர்வரும் வருடத்தின் போது மேற்கொள்ளப்படும். |

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(01) ஆம் இலக்க உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டி தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்றை தாபித்தல் வேண்டும். | புதிய குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அதனை செயற்பாடுடையதாக நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |